ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,637 — 1959 ජනවාරි 9 වැනි සිකුරාදා — 9.1.1959

11,637 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு தை மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

LB 6805

**கட்டுநயகாவிலுள்ள தோன்வூட் தோட்டத்திலுள்ள மரங்களிலிருந்து பிரயோசனங்கள் எடுப்பதற்கு குத்தகைப் பத்திரங்கள்**

கொழும்பு மாவட்டக் கிராமத்திட்டப் படம் 3,215 இலுள்ள 1 ம், 2 ம் துண்டுகளிலுள்ள காணியிலிருந்து விளைபொருட்களை எடுக்கும் உரிமைக் குத்தகைக்காகிய ஒப்பந்தக் கேள்விகள் கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபரால் கோரப்படுகின்றது. குத்தகைக்காலம் இரண்டு வருடம், 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1961 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ந் திகதி வரைக்கும் கீழ் குறிக்கப்படும் நிபந்தனைகளுக்கிணங்க.

2. ஒப்பந்தக் கேள்விகள் யாவும் மெழுகச்சிடப்பட்டு, கட்டுநயகாவிலுள்ள தோன்வூட் தோட்டத்திலுள்ள மரங்களிலிருந்து பிரயோசனங்கள் எடுக்கும் உரிமைக் குத்தகைக்காகிய " ஒப்பந்தக் கேள்விகள் " என்பதை காகித உறையில் குறித்து, அரசாங்க அதிபர் கொழும்பு மாவட்டம், கொழும்பு என விலாசமிட வேண்டும். 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ந் திகதி காலை 11 மணி வரைக்கும் இக்கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**நிபந்தனைகள்**

(1) கொழும்புக் கச்சேரியிலுள்ள காணிப் பகுதிக் கந்தோரிலிருந்து பெற்றுக்கொண்ட மாதிரிப்பத்திரத்தில் தான் கேள்விகள் அனுப்ப வேண்டும்.

(2) கட்டுப்பணம் ரூபா 25 அறவிட்டபின்தான் கேள்விப்பத்திரம் கொடுக்கப்படும்.

(3) எவருடைய கேள்விப்பத்திரம் ஏற்கப்பட்டதோ அவர் 3 மாத வாடகைக்காசு உடனடியாகக் கட்டவேண்டும். இப்பணம் குத்தகை முடிந்த காலத்தில், குத்தகைக்காரருக்குத் திருப்பிக்கொடுக்கப்படும்.

(4) குறிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் குத்தகைக்காரர் குத்தகைச் சீட்டில் கையொப்பமிடத் தவறினால் அவருடைய கட்டுப் பணம் வாபஸ்பண்ணப்படும்.

(5) குத்தகைச் சீட்டில் மற்றும் நிபந்தனைகளுடன் பின்வரும் நிபந்தனைகளும் இடம் பெறும் :—

(அ) குத்தகைப்பணம் ஒவ்வொரு குவாட்டரும் அக்குவாட்டர் 1 ம் தேதிக்குள் கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் கட்டப்படல் வேண்டும்.

(ஆ) இக்காணியின் பேரால் கட்ட வேண்டிய வரி முதலியனவை குத்தகைக்காரனே கட்டவேண்டும்.

(இ) குத்தகைக்காரன் இக்குத்தகையால் ஏற்படும் பலனையோ இக் குத்தகைச் சீட்டையோ கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபரின் முன் கூட்டில் பெற்ற அனுமதியின்றி பிறருக்கு மாற்றவும் கூடாது. ஈடுவைக்கவும் கூடாது. கையளிக்கவும் கூடாது.

(ஈ) குத்தகைக்காரன் இக்காணி எல்லைகளைத் திருத்தவோ, அங்குள்ள மரங்களையோ எவ்வித கட்டிடங்களையோ வெட்ட, இடிக்க, உடைக்கக் கூடாது.

(உ) குத்தகைக்காரன் இக்காணியிலிருந்து மண், மக்கி முதலியனவை வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

(ஊ) குத்தகைக்காரன் இக்காணியின் எல்லைகளையும் அங்குள்ள காவலாளரின் கொட்டிலையும் கவனமாகப் பாதுகாத்தல் வேண்டும்.

(எ) அரசாங்க அதிபரின் அனுமதியின்றி, எவ்வித கட்டிடமோ இக் காணியில் குத்தகைக்காரர் கட்டக்கூடாது.

(ஏ) இவ்வளவைத் துப்பரவாக வைத்திருப்பது, குத்தகைக்காரனின் பொறுப்பு.

(ஐ) எந்த நேரத்திலும் இக்காணி, முழுதையுமோ அல்லது ஒரு பாகத்தையோ, அரசாங்க அதிபர் ஒரு மாத கால அறிவித்தலின் பின்னர் திருப்பி எடுக்கமுடியும். அப்படி நேரிடும் பொருட்டு எஞ்சிய குத்தகைக்காலத்திற் கேற்ப கூடுதலாக அறவிட்ட குத்தகைப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

(ஒ) இந்நிபந்தனைகளுக் கிணங்க குத்தகைக்காரன் நடக்காவிடின், இக் காணியைத் திருப்பி உடனடியாக எடுக்கவும், கட்டுப்பணத்தை வாபஸ்பண்ணவும் உரிமையுண்டு.

(ஓ) அரசாங்க அதிபரோ, கைத்தொழில் அதிபரோ அல்லது அவர்களுடைய உத்தியோகத்தர்களோ பார்வையிடுவதற்கு வளவைத் திறந்துவைத்திருக்க வேண்டும்.

(ஔ) கைத்தொழில் பகுதியார் நிலையங்கள் சோதனை போடுவதற்கு ஒருவித தடையுமின்றி வேண்டிய உதவிகளைச் செய்தல் வேண்டும்.

(ஃ) குறிப்பிட்ட 2 வருட கால எல்லைக்குள் இக்குத்தகை ரத்துச் செய்யப்பட வேண்டுமாயின், குத்தகைக்காரன், அரசாங்க அதிபருக்கு 3 மாத அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

3. அரசாங்க அதிபருக்கு எக்கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ மறுக்கவோ உரிமையுண்டு.

சி. ஆர். டி. சில்வா,
கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

கொழும்புக் கச்சேரி,
1959 ம் ஞூ தை மீ 2 ந் உ.

## விளம்பரம்

1959 ம் ஆண்டு தை (ஜனுவரி) மாதம் 14 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக விருப்பதனை முன்னிட்டு, 1959 ம் ஆண்டு தை (ஜனுவரி) மாதம் 16 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரிசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு தை (ஜனுவரி) மாதம் 12 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1958 ம் ஞூ மார்கழி (டிசம்பர்) மீ 27 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.